www.Padasalai.Net www.TrbTnpsc.com

**MOST URGENT**

| **அனுப்புநர்** | **பெறுநர்** |
|---|---|
| திரு.க.செல்வக் குமார், M.A., B.Ed.,<br>இணை இயக்குநர் (பணியாளர்),<br>அரசுத் தேர்வுகள் இயக்ககம்,<br>சென்னை – 600 006. | அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,<br>அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள், |

ந.க.எண்.023978/பி2/2022 நாள்: 17.04.2023

ஐயா / அம்மையீர்,

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத்தேர்வு, ஏப்ரல் 2023 – மைய மதிப்பீட்டுப் பணி – விடைத்தாள் எண்ணிக்கைக்கேற்ப ஆசிரியர்கள் நியமனம் – அறிவுரைகள் வழங்குவது – குறித்து.

-------

ஏப்ரல் 2023 இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத்தேர்வு தொடர்பாக கல்வி மாவட்டந்தோறும் அமைக்கப்பட்டுள்ள விடைத்தாள் மதிப்பீட்டு முகாம்களில் தங்கள் மாவட்டத்தில் தேர்வெழுதிய மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப விடைத்தாட்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு பாடவாரியான எண்ணிக்கை விவரம் அனைத்து முகாம் அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அவ்வெண்ணிக்கைக்கு தக்கபடி மதிப்பீட்டுப் பணியை செய்து முடிக்க தேவையான ஆசிரியர்களின் எண்ணிக்கையினை சரியாகக் கணக்கிட்டு பாடவாரியான / பயிற்று மொழிவாரியான ஆசிரியர்களை உடனடியாக பணிவிடுவிப்பு செய்து முகாம் பணிக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும், தமிழ் வழியில் போதிக்கும் ஆசிரியர்கள் தமிழ்வழி விடைத்தாட்களையும், ஆங்கில வழியில் போதிக்கும் ஆசிரியர்கள் ஆங்கிலவழி விடைத்தாட்களை மட்டுமே மதிப்பீடு செய்ய வேண்டும் என்ற விதிமுறை பின்பற்றத்தக்க வகையில், தங்கள் மாவட்டத்தில் அமையும் மதிப்பீட்டு முகாமில் பெறப்படும் பயிற்றுமொழி வாரியான விடைத்தாட்களின் எண்ணிக்கைக்கு தக்க விகிதத்தில் ஆங்கிலம், தமிழ் வழிகளில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களை கணக்கிட்டு நியமனம் செய்து அனுப்பிட வேண்டும்.

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள முகாம் பணிக்கான அட்டவணையில் மதிப்பீட்டுப் பணி குறிப்பிட்டுள்ள நாட்களுக்குள் திட்டமிட்டு தொய்வில்லாமலும், காலதாமதமில்லாமலும் நடைபெற வேண்டும். மேற்படி மதிப்பீட்டுப் பணியினை மேற்கொள்ள தங்களது ஆளுகைக்குட்பட்ட அரசு பள்ளிகள் / அரசு நிதிஉதவி பெறும் பள்ளிகள் / தனியார் (மெட்ரிக் / ஆங்கிலோ இந்தியன்) பள்ளிகள் அனைத்திலிருந்தும் பத்தாம் வகுப்பு போதிக்கும் தகுதி வாய்ந்த பாட ஆசிரியர்களை தவறாமல் பணியிலிருந்து விடுவித்து தேர்வாளர்களாக நியமனம் செய்து மதிப்பீட்டுப் பணியினை மேற்கொள்ள அறிவுறுத்தி அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எந்தவொரு பள்ளியிலிருந்தும் ஆசிரியர்கள் விடுபடாது கண்காணித்தல் வேண்டும். தனியார் பள்ளிகள் தங்களது ஆசிரியர்களை முகாம் பணிக்கு முழு எண்ணிக்கையில் அனுப்பி வைத்தால் மட்டுமே அப்பள்ளிக்கான தேர்வு முடிவு வெளியிடப்படும். எனவே ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கைப் பட்டியலை (Teachers Profile) தவறாது சரிபார்த்து ஆசிரியர்கள் விடுபடாமல் வரவழைத்தல் வேண்டும்.

மேலும் ஒரு கல்வி மாவட்டத்தில் இரு முகாம்கள்/மூன்று முகாம்கள் அமைக்கப்பெற்றிருப்பின் முகாம்களின் தேவைக்கேற்ப விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்கு எவ்வித குந்தகமும் ஏற்படாமல் தகுதி வாய்ந்த ஆசிரியர்களை (CE, AE, SO & MVO) சரிவர பிரித்து ஒதுக்கீடு செய்திடுமாறு தெரிவித்துக் கொள்கிறேன்.

மதிப்பீட்டுப் பணிக்கு நியமனம் செய்யப்படும் ஆசிரியர்களுக்கு **19.04.2023–க்குள் நியமன ஆணையினை** தவறாமல் வழங்கிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**இணைப்பு**:
முகாம் பணி கால திட்ட அட்டவணை

**இணை இயக்குநர் (பணியாளர்)**
15/4/23. 15/4/2023

**நகல்:**

1. பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6,
2. அனைத்து முகாம் அலுவலர்கள்.

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

## SSLC EXAMINATION APRIL 2023

## VALUATION CAMP SCHEDULE

<table>
<tr><th>DATE</th><th>SUBJECTS</th><th>TRANSPORTATION FROM COLLECTION POINT TO CAMP</th><th>CE & SO SELF VALUATION</th><th>AE VALUATION</th></tr>
<tr><td>06.04.2023</td><td>Language (Thursday)</td><td rowspan="6">21.04.2023<br>(Friday)<br>7.00 AM</td><td rowspan="6">24.04.2023<br>(Monday)</td><td rowspan="6">25.04.2023<br>(Tuesday)<br>To<br>03.05.2023<br>( Wednesday )<br>( 7 working days )</td></tr>
<tr><td>10.04.2023</td><td>English (Monday)</td></tr>
<tr><td>13.04.2023</td><td>Maths (Thursday)</td></tr>
<tr><td>15.04.2023</td><td>Optional Language (Saturday)</td></tr>
<tr><td>17.04.2023</td><td>Science (Monday)</td></tr>
<tr><td>20.04.2023</td><td>Social Science (Thursday)</td></tr>
</table>

Uploading of marks: 25.04.2023 to 04.05.2023 (through online)

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com